உ

சிவமயம்.

நெல்வேலிவருக்கக்கோவை,

இது,

இராமநாதபுரம் சம்ஸ்தானத்தைச் சேர்ந்த

வீரசோழனென்னும் நகரவாசியும்

சௌந்தரியலகிரி யருளிச்செய்த

கவிராஜபண்டிதரவர்கள் புத்திரரும்

வேம்பத்தூர் வித்துவான்களிலொருவரும் ஆகிய

அம்பிகாபதி ஐயரவர்களால் இயற்றப்பெற்று

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

மு ரா. அருணாசலக்கவிராய ரெழுதிய

துறை, துறைப்பொருள், உரைக்குறிப்புகளுடன்

சுவாமி நெல்லையப்பர் கோவில் தருமகர்த்தர்கள்

திருநெல்வேலி ஸ்ரீமத் A. V.

இராமசாமிபிள்ளையவர்கள்

திருநெல்வேலிப் பேட்டை ஸ்ரீமத் வெ. மு.

சிவசுப்பிரமணியபிள்ளையவர்கள்

ஆகிய இருவர் பொருளுதவியால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

சிவமயம்.

நெல்லைவருக்கக் கோவை.

காட்சி.

(இதன் பொருள்.) தலைவன் தலைவியை ஒரு பூஞ்சோலையினிடத்துக் காணுதல். தலைவனென்றுந் தலைவியென்றுங் கூறிய இவர் யாவரெனின்? இல்லது, இனியது, நல்லது என்று புலவராற் கூறப்பட்ட மூன்றனுள் இல்லதாகிய புனைந்துரை வகையாற்றோன்றினவரென்க. இவரது இலக்கணம் யாதோ எனின்? பிணி மூப்பு இறப்புக்களின்றி எந்நாளும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் ஒத்தவரென்க. இவ்விருவரும் ஒருவரை ஒருவர் காணும்போது தலைவனுக்குப் பதினைந்து வருடமும் பத்து மாதமும் தலைவிக்குப் பதினொரு வருடமும் பத்துமாதமும் சென்றிருக்க வேண்டு மென்பது தொல்லாசிரியர் துணிபு.

அமிழ்துங் கயலும் புயலுந் தனியரக் காம்பலுந்தே
னுமிழும் புதியவெண் முல்லையு மாயுண்மை யாரணமுந்
தமிழுந் தெருமணக் குந்நெல்லை நாதர் தடஞ்சிலம்பிற்
கமழும் பொழில்வளர் வல்லிகண் டேன்கண் களிகொண்டதே. (க)

கண்படை பெறாது கங்குனோதல்.

(இ-ள்) தலைவியைப் பிரிந்த தலைவன் நித்திரை வராமல் இராக்காலத்தை நோக்கி வருந்துதல்.

ஆவியுங் காயமும் போலவொன் றாகி யவளுமியு
நீவியஞ் சிற்றிடை போலரு காநிற்கு நீங்கியநாள்
வாவியம் போருகஞ் சூழ்நெல்லை நாதர் வரையில்வல்லி
காவியங் கட்கடை போலற நீளுங் கருங்கங்குலே. (உ)

(க) அரக்காம்பல் - செவ்வாம்பல். (உ) நீவியம் - சேலை. அருகா நிற்கும் - குறையா நிற்கும். வல்லி - வல்லிக்கொடிபோல்வாள். அற - மிக.

கண்டோர் விலக்கல்.

(இ-ள்) தலைவியைத் தலைவன் விவாகஞ் செய்யும்பொருட்டுப் பாலைநிலத்து வழியிற் கூட்டிக்கொண்டுபோம்பொழுது அவ்விடத்துக் கண்டவர் விலக்குதல்.

இளைக்கும் பிறைமுத்தர் நெல்லையஞ் சாலி யீந்திலைபால்
வளைக்குங் குடிலில் வதுவைசெய் வாய்மறை பார்க்கிலுங்கள்
கிளைக்கும் பழுதில்லை யீங்கண்ண லேவெள்ளி கீழ்த்திசையின்
முளைக்கும் பொழுதெழுந் தாற்செல்ல லாநும் முதுநகர்க்கே. (௩)

வளையோடு பகர்தல்.

(இ-ள்) தலைவன் வைத்த அடையாளமுள்ள இடத்தில் தலைவிவந்து தலைவனைக் காணமற் றிரும்பிச் செல்லும் செய்தியைத் தலைவனுக்குச் சொல் லும்படி சங்குகளை நோக்கிச் சொல்லுதல்.

ஈன்ற வளைத்தப்பி ஞாளியின் வாய்தப்பி யெம்முயிரைப்
போன்ற வளைத்தப்பிப் போந்தனெல் லாம்புர மூன்றெரியத்
தோன்ற வளைக்குஞ் சிலையாளர் நெல்லைச் சுரும்பினிலாக்
கான்ற வளைக்குலங் காள்சொல்லு வீர்வரிற் காதலர்க்கே. (௪)

தழை நயப்புரைத்தல்.

(இ-ள்) தலைவன் கொடுத்த மாந்தழையைப் பாங்கி தலைவியினிடத்துக் கொடுத்துத் தலைவி விருப்பமுற்றதைத் தெரிந்து வந்து தலைவனுக்குச் சொல் லுதல்.

உழைவேடக் கண்ணினுக் கஞ்சன மாமொற்றைச் சிந்துரமாங்
குழைவேட மாயிழை வேடங்க ளாமுடல் கூனுஞ்சிலைக்
கழைவேட னெச்சிற் கருள்புரி வோர்நெல்லைக் கார்வரையிற்
றழைவேட மாறிப் பலவேடங் கொண்டதுன் றண்டழையே. (௫)

இரவுநீடத் தலைவி வருந்தல்.

(இ-ள்) தலைவன் வராத இராத்திரி காலம் அதிகமாகத் தோன்றுதல் பற் றித் தலைவி துன்பமுறுதல்.

---

(௩) குடில் - சிறு வீடு. மறை - வேதவிதி. (௪) ஞாளி - நாய். சுரும்பு - மலை. நிலாக்கான்ற - ஒளியைக் கக்கிய. (௫) உழை - மான். அஞ்சனம் - மை. இழை - ஆபரணம். கழை - மூங்கில்.

ஊழிக் கருங்கங்கு னீக்கிவெய் யோனையிங் குள்ளமைக்குங்
கோழிக் குலத்தை வளர்ப்பதல் லாற்கொழுங் காவிமள்ளர்
மேழிக் குழாமணக் குந்நெல்லை நாதர் வியன்சிலம்பிற்
பாழுக்கி யான்வளர்த் தேன்கிளி யோடன்னம் பால்பருந்தே. (சு)

பாகன்றன்னொடு சோகங் கொண்டவன் சொல்லல்.

(இ-ள்) கார்காலம் வரும்போது வருவேனென்று தலைவிக்குச் சொல்லிய தலைவன் வருத்தமுற்றவனாய்த் தேர்ச்சாரதியைத் தேரை விரைவாய் நடத்தும்படி குறிப்பாற் கூறுதல்.

எழுந்தாரை மாரிப் புனல்வெள்ள மோவெம்மை நீத்திருந்தா
ரழுந்தாரை மாரிப் புனல்வெள்ள மோகொன்றை யாடகப்பூச்
செழுந்தாரைச் சூடும் பிரானெல்லை நாதர் சிலம்பிற்செவ்விக்
கொழுந்தாரை வேல்வல வாவெந்த மாரி கொழிக்கின்றதே. (எ)

கையுறை மறுத்தல்.

(இ-ள்) தலைவன் கொண்டுவந்த கையுறையைப் பாங்கிவாங்காமல் மறுத்தல். கையுறை - காட்சிப் பொருள்.

எட்டிற் றிகழ்கொன்றை யார்நெல்லை நாதனை யீன்றகழைக்
காட்டிற் றருமுத்த மொன்றன்றி யீர்ங்கஞ்ச னனுமலர்
வீட்டிற் றருமுத்த முங்கரு மால்சங்கின் வெண்முத்தமுஞ்
சூட்டப் பெறுவன வல்லநங் நாட்டின் றுணிபிதுவே. (அ)

தன்னிலை தலைவன் சாற்றல்.

(இ-ள்) தலைவன் ஆசை நோயால் வருந்துந் தன்னிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல்.

ஐயம் புகுந்திருக் கைகளின் றுனு மடியிணைகள்
வையம் புகுமுந்தி மாறெழு வோனெல்லை மாநகர்வேள்
கையம்பு தைத்த பசும்புண்ணி லேவைத்த காரமொக்குங்
கொய்யம் புயமனை யாணாட் பார்வைக் குளிர்சிங்கியே. (கூ)

(சு) ஊழி - ஊழிக்காலம் போன்ற. அன்னம் - அன்னப் பறவையை. (எ) தாரைமாரி - நேரோட்டலாகிய மழை. தாரை - கண். தாரைவேல் - கூரியவேல். (அ) எட்டில் - இதழால். கழை - மூங்கில். (கூ) தொழுவோன் - தொழப்படுவோன். சிங்கி - விடம்.

தலைவனிடத் தலைவி வருந்தல்.

(இ-ள்) தலைவன் சொன்னபடி வாராமல் நாழிகை அதிகப்படத் தலைவி வருந்துதல்.

ஒருபோ துறங்குஞ் சரோருகங் காளுத யாதவன்றோ
வருபோ துறங்கு மலர்நெய்தல் காள்வண்டு காலுழத்தேன்
றருபோ தலரும் பசுங்கொன்றை யார்நெல்லைத் தண்சிலம்பி
லிருபோதுங் கண்ணுறங் காதிருப் பேனிங் கிமைப்பறவே. (கo)

அந் நகை பொறாஅ தவன் புலம்பல்.

(இ-ள்) தோழி சிரித்துச் சொல்லியதைச் சகியாமல் தலைவன் வருந்திக் கூறுதல்.

ஓலைக் குழைக்குங் கழைக்குமென் பாகி னுடன்கலந்த
பாலைப் பழிக்கு மொழிக்குமன் றேபிட்டின் பாதிக்கிட்ட
வேலைக் குழைக்கும் பிரான்றிரு நெல்லை வியன்சிலம்பிற்
சேலைப் பழிக்குங்கண் ணுப்நகைக் கேயுயிர் தேய்கின்றதே. (கக)

ஆற்றுநெஞ்சினோடவன் புலத்தல்.

(இ-ள்) பாங்கி கையுறை மறுத்தலைச் சகியாத தலைவன் றன்னெஞ்சொடு வருந்திக் கூறுதல்.

ஒளவவர் சீலம் பலவாகுஞ் சீல மறிந்தபின்ன
ரெவ்வெவர் நட்புங் கொள்ப்பெற்றி லேமிம வானணங்கை
வெளவிய கோலத்தர் நெல்லையஞ் சாரல் வரையில்வல்லி
நவ்வியங் கண்ணிணை யோற்றடு மாறிய நன்னெஞ்சமே. (கஉ)

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கல்.

(இ-ள்) தலைவன் பிரிந்த இடத்து வந்த மாலைக் காலத்தைக் கண்டு தலைவி வருந்துதல்.

கக்குங் கனற்பிறை நாவாகச் செக்கர் கடுமறலி
யொக்கும் படிக்குவந் தாலென்செய் வேனுடல் கூனிவயி

(கo) சரோருகம் - தாமரை. நெய்தல் - ஆம்பற் பூ. (கக) கழைக்கும் - மூங்கில் போன்ற தோளுக்கும். வேலைக்கு -தொழிலுக்கு. நகைக்கே - (உன்னுடைய) சிரிப்புக்கே. (கஉ) ஒளவவர் - அவ்வவரென்பதன் மரூஉ. வெளவிய- கிரகித்த. கோலத்தர் - மணக்கோல முடையவர். நவ்வி - மான், (கங) செக்கர் - செவ்வானம். கூனி - கோணி.

றெக்கும் பிறைமுடி யார்நெல்லை நாட்டி லிரைவிழுங்கி
விக்குங் குருகினங் காளுயிர் போகில் விழிபொத்துமே. (கங)

களிறுதரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.

(இ-ள்) சோலையில் விளையாடும்போது கொல்லவந்த யானையைக் கொன்று தலைவியைக் கூடிய தலைவன் களவைத் தோழி செவிலித்தாய்க்குக் குறிப்பால் வெளிப்படுத்துதல்.

கரட்டானை வென்ற பொழுதுந்த யானைக் கடுங்குரலைக்
கேட்டார் செவியினுங் கேட்குங்கொ லோகிளர் கெண்டையங்கண்
வாட்டாரை யாய வடிவுடை யாள்வலப் பாகர்நெல்லை
நாட்டா ரறிப மணமுர சாலிக்கு நல்லொலியே. (கச)

ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்.

(இ-ள்) தலைவனுடன் சென்ற தலைவியைச் செவிலித்தாய் தேடிச் செல்லும்போது வழியில் எதிரே வரக்கண்டு திரிதண்டமுடைய அந்தணரைக் கேட்டல்.

கிம்புரிக் கோட்டுக் களிற்றுளர் நெல்லைக் கிரியிலிரண்
டம்பிருக் குங்கண்ணி யண்ணல்பின் னேயழல் வாய்க்குகையிற்
செம்புருக் கிச்சொரிந் தாலன்ன பாலைச்சென் றாகம்வெந்த
வெம்புரிக் கொக்குமென் றூற்சென்ற வாறெங்ஙன் வேதியரே. (கரு)

சுனை நயப்புரைத்தல்.

(இ-ள்) தோழியை யறியாது சென்று தலைவனைப் புணர்ந்து வந்த தலைவி இதுவரை யெங்குச் சென்றாயென்று கேட்டதோழிக்குச் சுனையாடி வந்தேனென்று சொல்ல, அவள் களவைத் தெரிந்து தோழி பரிகாசமாகச் சுனையினது நன்மையைச் சொல்லுதல்.

கீற்றுப் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரற் கிரியிலிரண்
டூற்றுச் சுனைமுக் குளித்துதைந் தாடியு மூறைகட்டும்
வேற்றுத் தலந்தொறும் வேர்வழி யாமல் விரகுவர
நோற்றுப் பிறந்தனை பேயனங் கேநல்ல நோன்பிதுவே. (கசு)

எக்கும்- ஒரு புறம் வற்றிவளையும். விழி-(என்) கண்ணை. பொத்தும் - மூடுங்கள். (மரணகாலத்தில் மரணமடைவார் கண் திறந்திராமல்மூடி வைத்தல் உலகவழக்கு) (கச) தாரை-கூர்மை. ஆலிக்கும்-ஒலிக்கும். (கரு) கிம்புரி - யானைத் தந்தத்திற் கட்டும் பூண். செல் - ஊர்ந்துசெல் கின்ற. (கசு) முக்குளித்து - அமிழ்ந்தி. ஊதை - காற்று. விரகு - உபாயம். நோற்று - தவஞ்செய்து.

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்) பொருளின் பொருட்டுப் பிரிந்த தலைவன் கார்காலம் வருவே னென்றபடி வாராமையால் அக்கார் காலம் வரக்கண்டு தலைவி வருந்திச் சொல்லுதல்.

குறைக்கோல வெண்டிங்கள் வேணியர் நெல்லைக் குளிர்பொருநைத்
துறைக்கோல வண்டினங் காளனங் காடுணைக் கைபிடித்து
நறைக்கோலங் கண்ட மலர்க்கண்க ளாலின்று நானிருந்த
சிறைக்கோலங் கண்டில ரேபொருண் மேலன்பு சென்றவரே. (கஎ)

நீடு நினைந்திரங்கல்.

(இ-ள்) புணர்ச்சி யெய்தாமையால் இவளுள்ளம் எங்ஙனிசையுமோ வெனத் தலைவன் தலைவியை நோக்கி நெடுநேர நினைந்து வருந்திக் கூறுதல்.

கூன்முகத் திங்க ளொருரேகை காண்கினுங் கொப்பளிக்குந்
தேன்முகத் தாம்ப லலருங்கெட் டேன்செங்கண் மாலுங்கஞ்ச
நான்முகத் தோனுந் தொழுநெல்லை நாதர்தந் நாட்டிலிந்த
மான்முகத் திங்கள்புக் கும்மல ராதுதென் வல்வினையே. (கஅ)

தான் குறிமருண்டமை தலைவியவட்குணர்த்தல்.

(இ-ள்) தலைவன் வைத்த குறியிடத்தையறியாமற் சிரமப்பட்டுச்சென்று வந்ததைத் தலைவி பாங்கிக்குச் சொல்லுதல். குறி - அடையாளம்.

கெங்கைச் சடாடவி யர்நெல்லை நாதர் கிரிப்புறத்தி
லங்கைத் தலத்துந் தவழ்ந்துசென் றேன்சென்ற வாடவர்கைப்
பங்கப் பழம்புண் ணிடையே புதுப்புண் பரந்தவெம்மைக்
கொங்கைக் குறிகள்கண் டாலாய ரேயென்னைக் கோவிப்பரே. (கசு)

மெய்தொட்டுப் பயிறல்.

(இ-ள்) தலைவன் தலைவியின் சரீரத்தினொருறுப்பைத் தீண்டிப் பழகுதல்; அஃதாவது: கூந்தலிலுள்ள வண்டுகளை யோட்டுதல் போலத் தோளைத் தொட்டுப் பேசுதல்.

(கஎ) நறைக்கோலம் - மணக்கோலம். (கஅ) ரேகை - வரை; ஒரு சிற்றளவு. புக்கும் - புகுந்தும். ஆம்பல் வாய்க்குவமையாதலறிக. (கசு) கெங்கை - கங்கையின் மரூஉ. குறி - வடு. ஆயர் - தாய்மார்.

கேழற் பெருங்கொம் பணிநெல்லை நாதர் கிரியிற்கொங்கை
வாழப் பொருது மருங்குல்கெட் டேன்வண்டர் வாய்சுவைத்து
வீழக் கருங்கண் டிறக்குஞ்செங் காவிமென் றொனினுஞ்
சூழப் பொருதுகண் டேர்பெற்ற தாயர் துணிவுநன்றே. (உ0)

முன்னிலை யாக்கல்.

(இ-ள்) தலைவி நிற்பது தன் காரியத்திற்கு வேண்டுங் காரண மென்றெண்ணி அவளைத் தலைவன் முன்னிலையாக்கிப் பேசுதல்.

கையுங் கவணு மிதணுங்கல் லோசையுங் காவல்செய்து
தொய்யும் புவனமுந் தோன்றநிற் பீர்தொல்லை மாபுரமுன்
றெய்யுங் கழைமுத்தர் நெல்லைபஞ் சாரலி னீஞ்செறிந்து
கொய்யும் புனம்வைப்ப ரோவென்ன மாயமிக் கோலங்களே. (உக)

புறங் காட்டல்.

(இ-ள்) தலைவனும் தலைவியுஞ் சயனித்திருக்கும்போது தலைவி புறங்காட்டுதலைச் சகியாமல் தலைவன் சொல்லுதல். புறம் - முதுகு.

கொலைவேழ மன்றுரித் தார்நெல்லை நாதர் குளிர்சிலம்பிற்
கலைவேழ மியானெய்த காட்டிடை யேயும்மைக் கைப்பிடித்துத்
தலைவேழ முன்னிட்ட வன்றும்மைப் பின்விட்ட தண்ணளிக்கோ
முலைவேழ முன்னிட்டின் றெம்மைப்பின் னுக முனிவிட்டதே. (உஉ)

இறைமகளாடிடநோக்கி யழுங்கல்.

(இ-ள்) தினையறுத்தபின் புனங்காவலை விட்டுத் தலைவியைத் தோழி கொண்டு போம்போது தான் விளையாடிய இடத்தைப் பிரிதற்கஞ்சித் தலைவி வருந்துதல்.

கோணும் பிறைமுத்தர் நெல்லைபஞ் சாரலின் குன்றிலிபாம்
பேணும் புனமும் பிழைபட்ட தாற்பிறை வாயினம்பும்
நாணுஞ் செறியுஞ் சிலைவேட ராலுநம் மாலுநன்கு
காணுங் கணித்தெய்வ மும்பகை யானதென் காவலுக்கே. (உங)

(உ0) வாழ - பெருத்து உயர. (தாற்பரியம்). வண்டர் - வண்டுகளே. (உக) இதண் - பரண். தொய்யும் - சேறும். புவனமும்-நீரும். (உஉ) கலை - மான். தலை வேழம் - முதன்மையாகிய யானை. முன்னிட்ட - எதிரிட்ட. பின்விட்ட-(எனக்குப்) பின்னிறுத்திய. முனிவிட்டது - கோபஞ் செய்தது. (உங) சாரல்-மலைப்பக்கம். பிழைபட்டது - தவறுபட்டது; அஃதாவது:தினை யறுத்த பின் காவலறுதல். ஆல் - அசை. கணித்தெய்வம் - வேங்கை மரமாகிய தெய்வம். வேங்கை பூத்தகாலம் தினையறுக்கும் காலமாதலால்பகையானதென்றாள்.

முல்லையைப் பழித்தல்.

(இ-ள்). தான் வளர்த்த முல்லைக் கொடி தனக்கு விரோதமாக அரும்பை யீன்று மன்மதனுக்குப் பாணமாக்கித் தன்னை யெய்யச் செய்தலால் அம்முல்லைக் கொடியைத் தலைவி நிந்தித்துச் சொல்லுதல்.

கௌவைத் திரைக்கங்கை யார்நெல்லை மேற்கட நீர்வடித்துச்
செவ்வைப் படவிதற் கோவளர்த் தேன்றிங்கள் வெண்குடைக்கீழ்ப்
பௌவத் திரைமுர சார்ப்பவில் வேளுக்குப் பாசறையின்
மௌவற் றிணிபரும் பீர்கணை யாய்விட்ட வாறுநன்றே. (உச)

புகழ்தல்.

(இ-ள்) தலைவியினது நலத்தைத் தலைவன் மகிழ்ந்து சொல்லுதல். நலம்- அழகு.

சடைவீடு கங்கைக் களித்தார்தென் னெல்லையிற் றுவியகட்
கடைவீட தாகுங் கனங்குழை யிருந்தி கான்றகஞ்ச
மடைவீட தாகு மயன்றலை நாவி லனங்கனுக்கோர்
படைவீடு வேண்டுமென் றேவெளி யாயிடை பாலித்ததே. (உரு)

கையுறை மறுத்தல்.

(இ-ள்) அஃதாவது துறைப்பொருளிற் காண்க.

சாயின்ற பாவையன் னாளுக்கு வேலைமண் டாங்குரகன்
வாயின்ற மாணிக்கங் கொண்டுவந் தானு மணிமுடிமேற்
காயின்ற கொன்றை கமழச்செம் பாதி கலந்தபச்சை
வேயின்ற முத்தன்றி வேண்டுவ தோநெல்லை வெற்பிடத்தே. (உசு)

இறைமகளாடிட நோக்கியழுங்கல்.

(இ-ள்) உடு-வது துறைப்பொருளிற் காண்க.

சினங்கானுஞ் சூலப் படையாளர் நெல்லைச் சிலம்பிலென்றன்
மனங்கால்பின் முன்செலச் செல்லுகின் றேன்வள்ளை பாடுகிள்ளை
யினங்காள் வெறுங்கவண் காளிதண் காளெம்மை நீத்தயரும்
புனங்காளிங் கேதுசொல் வீர்வந்து தேடும் புரவலர்க்கே. (உஎ)

(உச) கௌவை - ஒலி. கடம் - குடம். பௌவத்திரை - கடல் (இருபெயரொட்டு). பாசறை - படை வீடு. மௌவல் - முல்லையினது. (உரு) படைவீடு - போர்செய்தற்குச் சேனையோடு தங்கியிருக்குமிடம். வெளி - ஆகாயம். பாலித்தது - சிருட்டித்தது (தாற்பரியம்.). (உசு) சாய் - அழகு. (சாயலென்பதில் அல்கெட்டது) உரகன் - ஆதிசேடனாகியபாம்பு. (உஎ) கானும் - கக்கும். மனங்கால் பின்முன் - மனம்பின்னும் கால்முன்னும். வள்ளை - உலக்கைப் பாட்டு, இதண் - பரண்.

பாலனைப் பழித்தல்.

(இ-ள்) புத்திரனைப்பெற்ற காலத்தில் தலைவியைத்தலைவன் சேராதிருந்திலால் தலைவி அப்புத்திரனை நிந்தித்துச்சொல்லுதல்.

சீறுக் கருணைபர் நெல்லையி லேயன்பர் சிந்தைதனை
மாறுக்கி விட்ட மழகளி றேமலர்க் காவியங்கண்
ணூறுக்கி விட்டதும் போதாமல் வேங்கை யடைகிடந்த
தூறுக்கி விட்டனை யேதமி யேனைத் துணைவருக்கே. (௨அ)

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.

(இ-ள்) தினையறுத்தபின் தன்னூர்க்குச் செல்லும்போது தலைவி தலைவனைப் பிரிந்திருக்க நேர்ந்ததேயென்று நினைந்துவருந்திச்சொல்லுதல்.

சுனைவிளை நீருண்டி யாம்புனங் காவற் றொழில்புரிந்தாற்
றினைவிளை வாமென் றிருந்ததெல் லாந்தென்றற் கன்றுமுன்றின்
மனைவிளை யாடுந் திருநெல்லை நாதர் வரையினிற்றீ
வினைவிளை வாய்விட்ட தேயிது வோபின் விளைவதுவே. (௨௯)

குருகோடு புலம்பல்.

(இ-ள்) தலைவி தலைவனைச்சேர்ந்திருக்கும் இரவு விடிதலைக்கண்டு கோழியோடு வருந்திக்கூறுதல்.

சூழிக் கரியுரித் தார்நெல்லை மேற்குன்றந் தூட்படுத்தும்
பாழிச் சுடரிலை வேலன்வந் தாற்றிரைப் பாய்சுருட்டு
மாழிக் கதிரவ னைக்கங்குல் யாமத் தழைக்கவெழுங்
கோழிக் கிதுமுறை யோவினை யேனென் குறைசெய்ததே. (௩0)

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்) தலைவன் பிரியும்போது கார்காலத்துக்கு முன்னே வருவேனென்று குறிப்பாற் கூறியபடி வாராமையால் கார்ப்பருவங் கண்டு தலைவி புலம்பிக் கூறுதல்.

(௨அ) மழகளிறே - யானையினிளங்கன்று போல்வாய். வேங்கை-புலி. (௨௯) தென்றற்கன்று - இளந்தென்றல். தீவினைவிளைவு - தினை யறுத்த பின் தலைவனைக் காணப்பெறாமை (௩0) சூழி - யானைமுகபடாம். வேலன் - குமாரக் கடவுளை யொத்த தலைவன். கோழிக்கு- கோழியாகிய வனக்கு.

செருவந்த சூலப் படையாளர் நெல்லைச் சிலம்பின்முந்நீர்க்
கருவந் தெழுந்த கருங்கொண்டல் காள்கலங் கிக்குமுறி
யுருவங் கருகிப் பரந்துகண் ணீர்சிந்தி யோடமுன்னாட்
பருவங் குறித்தநுண் டோவெனைப் போலொரு பைந்தொடியே. ()

குறம்.

(இ-ள்) தலைவி தலைவனைச் சேரக்கூடுமோவென்று சந்தேகித்திருந்த இடத்துக் கூடுமென்று குறத்திவந்து குறிசொல்லுதல்.

சேலிற் றிகழ்விழி யாயிடு கூழன்பர் சேர்வரிந்தச்
சூலிக் கவுளி வலமுநன் றேதொல்லை யஞ்செழுத்தின்
மூலிக் கழைமுத்த னெல்லையஞ் சாரன் முளைத்தெழுந்த
சாலிக் குறிபொய்க்கு மோகுறங் கூற றவறினுமே. (௬௨)

தழை நயப்புரைத்தல்.

(இ-ள்) இ-ஆவது துறைப் பொருளிற் காண்க.

சைவத் துறையன்பர் நெஞ்சினுள் ளார்நெல்லைத் தண்சிலம்பின்
மைவைத்த வேல்வைத்து வார்குழன் மேல்வைத்து மார்பில்வைத்து
மெய்வைத் திருந்து முலைமுகத் தேவைத்து மேற்றெழுது
கைவைத்து வாங்குந் தழையைநின் மார்பென்று கண்டனளே. (௬௩)

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப்படுதல்.

(இ-ள்) இரவுக்குறியிடத்தில் தலைவன் தலைவியை நேரே வந்து காணுதல்.

சொரியுங் கதிர்ச்சுடர்க் கன்றிச்சந் ரோதயந் தோன்றமடல்
விரியுங் கமலமெங் கேபடைத் தீர்வெள்ளை வேதத்தனு
மரியுந் தொழுமர னெல்லையஞ் சார லரையிருள்வாய்
வரியுண் கயல்விழி யீரெம்மை யாள வருவதற்கே. (௬௪)

புகழ்தல்.

(இ-ள்) உரு-ஆவது துறைப்பொருளிற் காண்க.

---

(௬௨) சூலி - கருவுடையதாகிய. கவுளி - பல்லி. மூலி - மூலமாயுள்ள வனுகிய. (மூலம் - பிரணவப் பொருள்.) சாலிக்குறி - நெற்குறி- குறம் - குறி. (௬௩) வேல் - வேல் போன்ற கண். (௬௪) கதிர் - சூரியன்- மடல் - இதழ்.

சோதிப் பிறைமுச்தர் நெல்லைபஞ் சாரற் சுரும்பிற்கச்சின்
வீதிக் கடங்குமென் றேவணிந் தீர்வெளிப் போந்தவிந்த
வாதிப் பகிரண்ட மொன்றிரண் டாக வறுக்கவந்த
பாதிக் கடங்குமல் லாலடங் காதும் பணைமுலையே. (ருரு)

மெய்தோட்டுப் பயிறல்.

(இ-ள்) உ௨-ஆவது துறைப்பொருளிற் காண்க.

சௌரியங் கொண்ட புயத்தவி சேறித் தனித்திருந்து
கெவுரிகொண் டாடும் பிரானெல்லை நாதர் கிரியிற்றென்றற்
கவுரிகொண் டாலு மொருநூன் மருங்குலைக் கண்டும்வண்டர்
பவுரிகொண் டீர்குழன் மேல்விசைக் காற்றுப் படப்படவே. (ருசு)

இடையூறு கிளத்தல்.

(இ-ள்) தலைவி வெட்க முற்றுக் கண்ணை மூடிக் கொண்டு நிற்றலினு லெழுந்த துன்பத்தைத் தலைவன் கூறுதல்.

ஞானந் திரண்ட திருமேனி யார்நெல்லை நாட்டிற்றென்னன்
மீனங் கவரும் வழிபணங் கேவண்டு மேய்ந்தகுழற்
கானம் புகுந்தவென் காம விடாய்கெடக் கண்டதந
பானந் தரநினை யீரினிப் போதும் பராமுகமே. (ருஎ)

பிறைகண் டிரங்கல்.

(இ-ள்) தலைவி பிறைச் சந்திரனைக் கண்டு வருந்திக் கூறுதல்.

ஞெகிழிப் பொறிவிட்ட சந்த்ரோ தயநென்னன் மாரன்விட்ட
பகழிப் பசும்புண் படிலென்செய் வேன்பொன் பரப்பிக்கொண்ட
புகழிற் றிகழ்நெல்லை வேய்முத்த நாதர் பொருப்பின்முந்நீ
ரகழிக் கருங்கம்புள் காளன்பர் வாய்மைபு மன்பற்றதே. (ருஅ)

(ருரு) வீதி - விசாலம். பகிரண்டம் - வெளியண்டம். பணை - பருத்த. (ருசு) சௌரியம் - வீரம். புயத்தவிசு - தோளாகிய ஆதனம். கெவுரி - பார்வதி (கௌரியென்பதன் மரூஉ). தென்றல் - தென்றற் காற்றால். கவுரி...... ஆலும் - அசையும். பவுரி - கூத்தின் விகற்பம். (ருஎ) கானம் - காட்டில். விடாய் - தாகம். (ருஅ) ஞெகிழி - கொள்ளிக் கட்டை. பொறி - தீப்பொறியை. முந்நீர் - கடல் போன்ற. கம்புள் - சம்பங்கோழி.

தன்பதியணிமை சாற்றல்.

(இ-ள்) இவ்விடத்திலே தங்கிப்போதல் வேண்டுமென்ற தலைவிக்குத் தலைவன் றன்னுடைய ஊர் சமீபத்திலுள்ளதென்று கூறுதல்.

ஞொள்கா னுடங்கு மிடைமட வீர்நங்க ணேக்கியமான்
வெள்கா வருந்துஞ் சுரங்கடந் தோமினி மேனடந்தாற்
றெள்காவுந் தென்றற் றிருவீ தியுஞ்சிந்து பூந்துறைநீர்
கொள்காவும் வேய்முத்தர் கோபுர வாயிலுங் கோயிலுமே. (௩௯)

முல்லையைப் பழித்தல்.

(இ-ள்) தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்குங் காலத்தின் மலர்ந்த முல்லைக் கொடியைத் தலைவி நிந்தித்துக் கூறுதல்.

தண்டோட் டிளங்கொன்றை யார்நெல்லை நாட்டிற் றறைபிளந்து
கொண்டோட்டும்வேரில்வெந்நீர்விட்டிலேன்வெள்ளிகொண்டுசெய்த
வெண்டோட்டுப் பூந்தள வேயுன்னை மான்மென்று தின்பதைநான்
கண்டோட்டி விட்டதற் கோநகைத் தாயுன் கருத்துநன்றே. (௪௦

பிறைகண் டிரங்கல்.

(இ-ள்) ௩அ-ஆவது துறைப் பொருளிற் காண்க.

தாதக லாத சடையாளர் நெல்லையிற் றாழ்மகரக்
காதக லாத கயல்விழி யீர்கடுங் கூற்றன்விட்ட
தூதக லாத பிறைபோல மேற்றிசை தோன்றசற் றும்
போதக லாதிருப் பீருயிர் காணுமுன் போகின்றதே. (௪௧)

குரவோடு புலம்புல்.

(இ-ள்.) தலைவன்பின் சென்ற தலைவியைத் தேடிவரும் செவிலித்தாய் குராமரத்தைக் கண்டு அதனிடத்தில் வருந்திக் கூறுதல்.

---

(௩௯) ஞொள்கால் - இளைத்தலால். நுடங்கும் - அசையும். வெள்கா - வெட்கப்பட்டு. தெள்கா - தெளியப்பட்ட சோலை (இருண்ட சோலையன் றென்றபடி). (௪௦) தோடு - பூவிதழ். தளவே - முல்லையே. நகைத்தாய் - (என்னைப்பார்த்துச்) சிரித்தாய். (௪௧) தாது - பொன்னிறம் (ஆகுபெயர்). சற்றும் - சிறிதும். போது - (இப்) பொழுது. அகலாதிருப்பீர் - (தலைவன்பாலிச் செய்தியைச் சொல்லப் போகாமல் என்னை விட்டு) நீங்காதிருப்பீர்.

திரைப்பாவை சூடும் பிரானெல்லை நாதர் சிலம்பிற்செல்வி
பொரப்பாவை வேலன்பின் னேதனி யேசுற்றில் போட்டுவெள்ளப்
பரப்பாவை யோசெலல் கண்டிருந் தோயும் பசியகுரா
மரப்பாவை யாதலி னேதடுத் தாயில்லை வாய்திறந்தே. (சஉ)

தலைவி தன்னுட்கோள் சாற்றல்.

(இ-ள்) தலைவனுடன் செல்லுந் தலைவி தன் எண்ணத்தைத் தாய்மாருக்குச் சொல்லும்படி தன்னெதிர் வரும் அந்தணரிடத்திற் சொல்லுதல்.

திட்டச்சொ லாமழு வார்நெல்லை நாதர் சிலம்பிற்கல்வி
னட்டச்சொ லீர்முல்லைப் பந்தர்க்குக் கானவ்வி நாவுலரா
தூட்டச்சொ லீர்முலை தேடுமென் பூவை யுறங்கத்தொட்டி
லாட்டச்சொ லீரந்த ணீர்பெற்ற தாய ரளவுசென்றே. (சங)

வண்டுறைதாரோன் வந்தெதிர்ப்படுதல்.

(இ-ள்) நச-ஆவது துறைப்பொருளிற் காண்க.

துள்ளிட்ட கங்கைச் சடையாளர் நெல்லைச் சுரும்பிலிரா
நள்ளிட்ட தாமரை யார்திறந் தார்நடு நீர்மணையிற்
கள்ளிட்ட தோட்டுக் கபாடம் புறம்விட்டுக் காலதச்ச
னுள்ளிட்டு வைத்தில னேமணித் தாளை யுபாயஞ்செய்தே. (சச)

தன்மக ளிளமைத் தன்மைக் குளமெலிந்திரங்கல்.

(இ-ள்) நற்றாய் தன்மக ளிளமைக்குணத்துக்கு மன மெலிந் திரங்கிக் கூறுதல்.

தூதைக் கலனுஞ் சிறுசோறுஞ் சிற்றிலுந் தோழியருந்
தாதைக் குலமு மறந்தன ளாயினுஞ் சங்கரிதன்

(சஉ) செல்வி - இலக்குமி. பொரப்பாவை - ஒத்த அப்பெண். வெள்ளப் பரப்பா - வெள்ளத்தின் விரிவுபோல; அஃதாவது: வெள்ளத்தின்விரிவு கண்ட இடமெல்லாம் போதல் போலத் தலைவி தலைவன் சென்ற இடமெல்லாஞ் செல்லுதல். கண்டிருந்தோயும் - பார்த்திருந்த நீயும். குரா - குராமரமே. (சங) திட்டச் சொலாமழு வென்றது: யுத்தஞ் செய்யப் பகைவரில்லாமற் கூர்மையோடிருக்கின்ற மழுவாயுத மென்றபடி. கல்வில் - கல்லால். கால் - தூண். நவ்வி - மான். தாயாளவு - தாயாரிருப்பிடம் வரை. (சச) துள் - குதித்தல். சுரும்பு - மலை. இராநள் - அர்த்தராத்திரி. கபாடம் - கதவு. காலதச்சன் - இராக்காலமாகிய தச்சன்- (சடு) தூதைக்கலன் -சிறு முட்டியாகிய பாத்திரம்,

காதற் கொழுநர்தந் நெல்லைபி லேகை நெகிழிலமும்
பேதைக் குலமெங்ங னேமறந் தாள்சென்ற பேதையின்றே. (சரு)

தன் மகள் மேன்மைத் தன்மைக்கிரங்கல்.

(இ-ள்) நற்றாய் தன்மகள் மெல்லிய தன்மைக்கு வருந்திக் கூறுதல்.

தெருப்பைந் தமிழ்மணக் குந்நெல்லை நாதர் சிலம்பிற்செந்தீப்
பொருப்பொன்று கூடிடங் கனம்பொறுத் தாள்பகற் போதுவிண்ட
மருப்புண்ட ரீகம் பறிக்கநெட் டோடையில் வந்துபுக்கு
நெருப்பென்று நின்றழு தாளிளந் தாமரை நேரிழையே. (சசு)

தலைவனீடத் தலைவி வருந்தல்.

(இ-ள்) க0-ஆவது துறைப் பொருளிற் காண்க.

தேங்கோடு சிந்தும் பொழினெல்லை நாதர் சிலம்பிற்செவ்விக்
கோங்கோ டிணையுங் குவிமுலை யீர்குட நீர்விடுநாட்
பூங்கோடு சற்றுங் கருகாமற் போற்றி வளர்த்தவிந்த
மாங்கோடு பூக்குமுன் னேயன்பர் வார்த்தை வடுப்பட்டதே. (சஎ)

தலைமகன் மறுத்தல்.

(இ-ள்) விவாகஞ் செய்து பின்னர்ச் சேர்வாயென்று உலகியலுரைத்த பாங்கி வார்த்தையைச் சகியாதவனாய்த் தலைவன் மறுத்துக் கூறுதல்.

தைக்குங் கணைவிழி பங்காளர் நெல்லைத் தலத்தில்வண்டு
மொய்க்கும் பசுந்தழை வாங்குகி லீர்முலைப் பாரஞ்சுமந்
தெய்க்குங் கொடியிடை போலிளைத் தேற்கின்று நாளைக்கென்று
பொய்க்கும்பொருள்சொல்லுவீருமைப்போலில்லைபூவையரே. (சஅ)

தலைமகன் பொருள் வயிற் பிரிந்துழித் தலைவி பனிக்காலங் கண்டிரங்கல்.

(இ-ள்) தலைவன் பொருளின் பொருட்டுப் பிரிந்த இடத்துத் தலைவி பனிக்காலம் வரக்கண்டு வருந்திக் கூறுதல்.

கை நெகிழில் - (கை கோத்து விளையாடும்போது) கையோடு கை நீங்கினால். பேதைக்குலம்-சிறு பருவப் பெண் கூட்டம். (சசு) ஒன்று-பொருந்திய. மரு - வாசனை. புண்டரீகம் - தாமரை. (சஎ) தேம் - தேனை. கோடு - மரக்கொம்பு. இணையும் - ஒக்கும். மாங்கோடு பூக்கு முன்னே யன்பர் வார்த்தை வடுப்பட்ட தென்றது-மாமரம் பூக்குமுன்னே வருவே னென்ற தலைவன் மாமரம் பூத்தும் வாராமையால் அவன் வார்த்தை குற்றப்பட்டதென்றதாம்; இதிலுள்ள நயங்காண்க. வடு - குற்றம். (சஅ) எய்க்கும் - இளைக்கும்.

தொடைகிடக் குஞ்சடை யார்நெல்லை நாட்டிற் றுணைவர்வைவேற்
படைகிடக் கச்சென்ற நாட்டில்லை யோபனிக் காலமெல்லாம்
புடைகிடக் கும்பெடை பைச்சிற கான்மெல்லப் போர்த்துவிடா
தடைகிடக் குங்குரு குஞ்செக்கர் வானமு மந்தியுமே. (சகூ)

வறுங்கள நாடி மறுகல்.

(இ-ள்) தினையறுத்தபின் தலைவி நீங்கிய தினைப்புனத்தை நாடி வந்து அவளைக் காணாது தலைவன் மனஞ்சுழன்று கூறுதல்.

தொல்லைப் புரமெரித் தோர்நெல்லை நாதர் சுடர்க்கிரிமேற்
கொல்லைக் குறவர் மடந்தையெங் கேசொலுங் கோலமதன்
வில்லைக் குனிப்பவ ரேயநு ராகம் விளைப்பவரே
கல்லைப்பெண் ணுக்கு மவரேநம் மானத்தைக் காப்பவரே. (ருO)

வண்டறைதாரோன் வந்தெதிர்ப்படுதல்.

(இ-ள்) நசு-ஆவது துறைப் பொருளிற் காண்க.

தோளிட்ட மாலைச் சுடரோன் கபாடப்பொற் றோடடைத்துத்
தாளிட்ட தாமரை யார்திறந் தார்சந் திரனுக்கொற்றை
நாளிட்ட திங்கட் சடையாளர் நெல்லையி னள்ளிருள்வாய்
வாளிட்ட கண்மட வீரெம்மை யாள வருவதற்கே. (ருக)

குரவோடு புலம்பல்.

(இ-ள்) சஉ-ஆவது துறைப் பொருளிற் காண்க.

தௌவல்செய் தாயிலைத் தண்குர வேதழ லாயுடலம்
வௌவல்செய் யுங்கொடும் பாலையி லேதிங்கள் வட்டநிலாக்
கௌவல்செய் யும்பணிக் கங்கணத் தார்நெல்லைக் கார்வரைப்பூ
மௌவல்செய் யுந்நகை யாளடிப் போது வருந்துவதே. (ருஉ)

(சகூ) தொடை - மாலை. வேற் படை கிடக்கச் சென்ற நாடென்றது—வேலாயுத மிங்கே யிருக்கப் பொருளின் பொருட்டுச் சென்றநாடென்றபடி. புடை - பக்கத்தில். குருகு - நாரைப் பறவை. (ருO) கொல்லை - தினைப்புனம். வில்லைக்குனிப்பவர் - வில்லை வளைப்பவர்; வண்டுகள். அநுராகம் விளைப் வர் - (ஓசையால்) ஆசையை யுண்டாக்குபவர்; குயில்கள். கல்லைப் பெண்ணுக்குமவர்- அரிதாள்கள்; தினையறுத்த தூறுகள். மானத்தைக் காப்பவர் - கலைகள்; மான் கள். (ருக) கபாடம்-கதவு. தாளிட்ட-தாள் பூட்டிய. ஒற்றை நாளிட்ட திங்கள். மூன்றாம் பிறைச் சந்திரன். (ருஉ) தௌவல் - கெடுதல்; தடை. வௌவல் - பிடித்தல். திங்கள் - திங்களாகிய. பணி - பாம்பு. வருந்துவது - வருந்துவதை.

வறுங்கள நாடி மறுகல்.

(இ-ள்) ௰௦-ஆவது துறைப்பொருளிற் காண்க.

நல்லோசை கொண்ட தமருகத் தார்நெல்லை நாட்டெயினர்
வில்லோசை கேட்ட கலுங்கிள்ளை காளிதண் மீதிருந்தார்
சொல்லோசை யுங்குன் றொலியோசை யுஞ்சுற்றி விட்டகவண்
கல்லோசை யுந்தமி யேனென்று தானினிக் காண்பதுவே. (ருக)

புனங் கண்டு மகிழ்தல்.

(இ-ள்) தோழியுந் தலைவியுமிருக்கப் பெற்ற தினைப்புனத்தைக் கண்டு தலைவன் மகிழ்ந்து கூறுதல்.

நாப்பிட்ட பாம்பணி வோர்நெல்லை மேனறுங் காந்தள்விண்டு
தீப்பட்ட குன்றிற் செழுந்தினை காடின்னும் வேழமென்னக்
காப்பிட் டினக்கிள்ளை வீழாமற் கைக்கவண் கொண்டுநின்று
கூப்பிட் டவர்க்கன்றி யுங்களுக் கேனிக் குரனெரிவே. (ருச)

பாங்கி தலைவியை முனிதல்.

(இ-ள்) தலைவி யொன்றுக்கு மறுமொழி கொடாளாக அவளைச் சினந்து தோழி சொல்லுதல்.

நிறைக்குழை யாய வலம்புரி யார்நெல்லை நாட்டிற்செம்பொன்
முறக்குழை பாயுங் கயல்விழி யாய்கனல் மூட்டிக்கிண்டி
யுறக்குழை யாத பதத்தே வடிக்கு முலைமணச்சோ
றறக்குழைந் தாலு மரிசியென் றாலு மதிபிழையே. (ருரு)

நற்றா யிரங்கல்.

(இ-ள்) தலைவி தலைவனுடன் பாலைநிலத்திற் சென்றதை யுணர்ந்த நற்றாய் வருந்திக் கூறுதல்.

நீட்டிற் குறையுந் திருமேனி யார்நெல்லை நாட்டிலண்ணல்
கூட்டிக் கொடுசெலும் பேதைக்கு யான்கொடும் பாலைபழன்

(ருக) தமருகம் - உடுக்கு. எயினர் - வேடர். இதண் - பரண். (ருச) நாப்பிட்ட - நாக்குப் பிளந்த. காப்பு - காவல். கூப்பிட்டவர் - சத்தமிட்டவர். குரல் நெரிவு - தொண்டை நெரிதல் + கதிர் நெரிதல். (ருரு) வலம்புரி - சங்கு. முறக்குழை - முறம் போலும் வட்டமாகிய குழை. (முறம் - சுளகு.) பின்னிரண்டடியும் அதிகமாகப் பேசினாலும் ஒன்றும் பேசாதிருந்தாலுங் குற்ற மென்பதை விளக்கிற்று. (ருசு) நீட்டின் - (பாண்டியன் வேண்டுதலால்) வளர்ச்சியினின்றும்.

மூட்டிப் புகையெழு விக்குமென் றேமுன்னை நாளிற்செம்பஞ்
சூட்டிக் களித்திருந் தேனைய கோவவ. ளுள்ளடிக்கே. (ருரு)

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்) ௩க-ஆவது துறைப் பொருளிற் காண்க.

நுண்டுளி மாரியும் வெற்பையும் போன்முலை நோக்கிவிழுங்
கண்டுளி மாரியுங் கண்டில ரேதெவ்வைக் காயக்கொண்ட
மண்டுளி வாய்மழு வார்நெல்லை நாதர் வரையிலிந்தத்
தண்டுளி மாரிக்கு முன்வரப் போன தறுகண்ணரே. (ருஎ)

பாலனைப் பழித்தல்.

(இ-ள்) உஅ-ஆவது துறைப் பொருளிற் காண்க.

நூலா மருங்கி னுமைபாகர் நெல்லையி னோற்றுப்பெற்ற
பாலர் பகலும்வந் தாரில்லை யேகையிற் பற்றியவேற்
கோலா னெடும்புனத் திட்டமுள் வேலிபைக் கோலிமெல்லக்
காலால் வழிதட விக்கங்குல் வாய்வரக் கற்றவரே. (ருஅ)

குறம்.

(இ-ள்) ௩உ-ஆவது துறைப் பொருளிற் காண்க.

நெறிப்பட் டவர்தொழு நெல்லையஞ் சாரலி னின்றுவந்தோம்
வெறிப்பட்ட வாய்மைக் குறத்தியல் லேம்வெள்ளி வெற்பனுக்கு
மறிப்பட்ட கண்ணிக்கு மன்றிம வானில்லில் வட்டமுறக்
குறிப்பட் டதுபட்ட தால்ணங் கேயிடு கூழெமக்கே. (ருகூ)

இறையோ னிறைவி தன்மை யியம்பல்.

(இ-ள்) தலைவன்தான் காதலித்த தலைவி தன்மையைக் கூறுதல். தன்மை - இல்க்கணம்.

நேரிட்ட பாம்பணி வார்நெல்லை நாதர் நெடுஞ்சிலம்பிற்
போரிட்ட வேழமும் புண்பட்ட வேலும் புடையடங்க

(ருஎ) நுண்துளி - சிறுதுளி. மாரி - மழை. மண்டு - நெருங்கிய. உளிவாய் - உளியைப்போலுங் கூர்மை பொருந்திய. (ருஅ) நோற்று - தவஞ் செய்து. கோலி சுற்றி. கோலாலுங் காலாலு மெனக் கூட்டுக. (ருகூ) வெறிப்பட்ட - குடிவெறியுண்டாகிய. மை - கருநிறமுடைய. முறக்குறி - சுழகுக்குறியால். பட்டது - உண்டாகிய விவாகச்செய்தி. பட்டது - (ஊரெங்கும்) தெரிந்தது. (ஆதலால் எங்கள் குறி கைகண்ட குறியென்று தெரிவாயாக) (சும) நேரிட்ட - (தாருகாவனத் திருஷிகள் விட) எதிர்ப்பட்ட புடை - விம்முதல்.

வாரிட்ட கொங்கையுங் கண்களு மென்றுரு மாறிவந்து
பேரிட்டு நின்றன வாமென்னை வாட்டிய பெண்கொடிக்கே. (சுo)

தலைவன் புலர்ந்துபோதல்.

(இ-ள்) தலைவி குறி தவறி வாராமையால் தலைவன் தான் குறிப்பிட்ட இடத்திலிருந்து வருந்தித் தன்னூர்க்குப்போதல்.

நையு நுண் ணூலும் வெளியுமெய் சான்றவர் நாவறியாப்
பொய்யும் படைத்த விடைமட வார்தண் பொருநைச்சங்கஞ்
செய்யுந் தவமுந் திருநெல்லை நாதர் சிலம்பிற்கெட்டேன்
மெய்யுஞ் சொலக்கற்ப ரோவொரு காலம் விரும்பினர்க்கே. (சுக)

பிரிவுழிக் கலங்கல்.

(இ-ள்) பொருளீட்டுதற்காகத் தலைவன் தூரதேசத்திற்குச் செல்லப் பிரிந்த இடத்துத் தலைவி வருந்திக் கூறுதல். ஈட்டுதல் - சம்பாதித்தல்.

நொந்துளைந் தீன்ற கழைமுத்தர் நாட்டி னுரையின்முத்துச்
சிந்துதங் கானற் றிரைமணற் பாவைக்குச் சில்கழங்கு
பந்துதந் தாதரித் தென்பால் வரவழி பார்த்துநொந்து
வந்துநின் றுரைக்கொண் டோசெல்லு வாய்சொன் மரக்கலமே. (சுஉ)

பாகன் றன்னொடு சோகங் கொண்டவன் சொல்லல்.

(இ-ள்) கார்காலங்கண்டு சோகங் கொண்ட தலைவன் தேர்ப்பாகனோடு தேரை விரைந்து நடாத்தக் குறிப்பாற் கூறுதல்.

நோற்றுப் பிறந்த வுமைபாகர் நெல்லைபி னுண்டுளிநீ
ரேற்றுப் புயன்முந் திலென்செய்யு மோவெதி ரானதெவ்வர்
வேற்றுப் புலம்வென்று பந்தியை நோக்கி விரையும்பரி
காற்றிற் செலுமென்ப ரேவல வாவொன்றுங் கண்டிலனே. (சுஙு)

கொங்கையுங் கண்களுமென்று பேரிட்டு உருமாறி வந்து நின்றனவா மெனக் கூட்டுக. கொடிக்கு - கொடியினிடத்து. (சுக) வெளி — ஆகாயம். ஒருகாலம் மெய்யுஞ் சொலக் கற்பரோ எனக்கூட்டுக. (சுஉ) கானல் — கடற்கரைச் சோலை. கழங்கு — கழற்சிக்காய். மரக்கலம் - கப்பல். (சுஙு) நோற்றுப் பிறந்த - (மலையரசன்) தவஞ் செய்தலாற் பிறந்த; திருவவதாரஞ் செய்த. புயல்-மேகம். செய்யுமோ - செய்வாளோ. வலவா - சாரதியே.

ஆற்றிடை முக்கோற் பகவரை வினுதல்.

(இ-ள்) கடு - ஆவது துறைப் பொருளிற் காண்க.

நௌவியுந் தும்பையும் பூங்கொன்றை மாலையு நாண்மதியைக்
கௌவிய பாம்புந் தரித்தபி ரானெல்லைக் கார்வரையிற்
செவ்விய மாலைக் குரிசில்பின் னேமுகச் செவ்விகன்ற
வெவ்விய பாலையிற் சென்றன ளோவெங்கண் மெல்லியலே. (சுச)

தலைமகன் மறுத்தல்.

(இ-ள்) சஅ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

பல்லா தவனை யுகுத்தோர்தென் னெல்லையிற் பண்டெவர்க்கு
மில்லாத நல்லற மெய்திநிற் பீரெமக் கில்லையென்று
சொல்லாம னீரிட்ட நன்மணச் சோறு சுடினதனுட்
கல்லாய நேரமுண் டோர்பசி காணுங் கடிதெமக்கே. (சுரு)

பாணன் வாயில் வேண்டல்.

(இ-ள்) பரத்தையிற் பிரிந்த தலைவன் விடுத்த தூதாக வந்த பாணனது வீணையைக் கல்லாலுடைத்த தலைவிக்கு அப்பாணன் சமாதானஞ் சொல்லுதல்.

பாதிப் பிறைமுடி யார்நெல்லை நாட்டிற் பரத்தைதனைச்
சோதித்து விட்டல்ல வோவெறுப் பீர்சொலக் கேளுமெங்கள்
கீதத்து வீணை யுடைக்கவென் றேபைங் கிளிகடிந்து
சாதித்து நின்றதெல் லாமணங் கீரன்று தண்புனத்தே. (சுசு)

இரந்துகுறையெருதுவருந்தியகிழவோன்மடலேபொருளெனமதித்தல்.

(இ-ள்) மறுநாட் காலையில் வந்த தலைவன் பாங்கியாற் காரிய முண்டெனக்கருதி இரந்துகுறை முடியாதாயினேமென்று வருத்தமுற்று, இனிச் செய்வதாவது * மடலேறலேயென மதித்துப் பாங்கியோடு சொல்லுதல்.

(சுச) நௌவி - நவ்வி யென்பதன் மரூஉ. நவ்வி - மான். வெவ்விய - கொடிய. (சுரு) உகுத்தோர் - உதிர்த்தோர். பின்னிரண்டடிக்குந் தலைவியை யென்னோடு கூடச் செய்த நீ இப்போது விவாகஞ் செய்து கூடுடென்றதனுல் அதுவரை பொறுத்திருக்க முடியாதென்று தலைவன் பாங்கியினிடத்துச் சொன்னு னென்பது பொருளாகக் கொள்க. (சுசு) கிளி கடிந்து - கிளியைக் கவண்கல்லாலெறிந்து விரட்டி, பழகி-சாதித்து.

* மடலேறலாவது-பனங் கருக்காற் குதிரையும் பனைமரத்திலுள்ள மற்றவற்றால் வண்டி முதலாயினவுஞ்செய்து அக்குதிரையின் மேலேறுவது; அவ்

பிணங்குஞ் சடையு மெருக்கும்வெண் ணீறும் பிறங்குதசை
யுணங்குந் தனியென்பு மாலையு மாயெம் முயிர்பருகி
நிணங்கொண்ட வேல்விழி வல்லிய ரேயுங்க ணெல்லையினீர்
வணங்குங் கடவுளைப் போல்வரு வேனிந்த மன்றிடத்தே. (௬௭)

தலைவன் தலைவி வருத்திய வண்ணமுரைத்தல்.

(இ-ள்) தலைவி இளமைப் பருவமுடையவளென்று கூறிய பாங்கிக்கு அவ்விளமைப் பருவமே தன்னை வருத்திய விதத்தைத் தலைவன் கூறுதல்.

பீதாம் பரர்தொழு நெல்லையஞ் சாரலிற் பேதைகொங்கை
சூதாம் பருவத் தசைதல்கண் டாய்துணைக் கோடடக்கிப்
போதாம் பருவத்தில் வென்றுபொன் மேருவைப் போல்வளர்ந்தா
லேதாம் புவனங்கெட் டேனினி யேனோர்நெஞ்ச மென்படுமே. (௬௮)

எழுதரி தேன்றல்.

(இ-ள்) மடலூரத் துணிந்த தலைவன் தலைவியின் அவயவத்தை யெழுது தல் முடியாதென்று வருந்திக் கூறுதல்.

விதம் ஏறுவான் நிருவாணியாய் உடலெங்கும் நீறுபூசித்தான் இச்சித்த தலைவி யினுருவத்தை யொருபடத்தில் தன்கையாலெழுதி அப்படத்தின் தலையிலே தன்பெயரையெழுதித் தன்கையிற்பிடித்து நடு வூருள்ளே நாற்சந்தியில் ஆகாரம் நித்திரையில்லாமல் அப்படத்தின் மேலே பார்வையையு மனத்தையுமிருத்தி ஆசைவயத்தனாய் வேறுணர்ச்சியில்லாமல் ஆவுரிஞ்சினும் அழல்மேற் படினும் அறிதலின்றி மழைவெயில் காற்றால் மயங்காதிருக்குமிடத்து, அவற்றைக்கண்டு அவ்வூரிலுள்ளார் பலருங்கூடிவந்து நீ மடலேறிச்சோதனை தந்தால் நீ விரும்பி யபெண்ணைக் கொடுக்கச் செய்வோமென்று கூற, அதற்கவன் இசைந்தானானால் அவர்களதை அரசனுக்கறிவித்து, அவனுத்தரவு வாங்கிக்கொடுத்தால் மடலேற வேண்டும். அங்ஙனமேறும்போது பூனையெலும்பு எருக்கம்பூ இவைகளாற் கட்டியமாலை புனைந்து கொள்ளல் வேண்டும். அக்குதிரையின் வடத்தை யிழு க்க, அக்குதிரையின் யந்திரத்தினுருளை உருண்டோடும்போது பனங்கருக்கு அறுத்த இடமெல்லாம் அவன்சரீரத்தில் இரத்தம் வெளிப்படாது வீரியம் வெ ளிப்பட்டால் அப்போது அவன்கருதிய பெண் யாராயிருந்தாலும் அவளை யலங் கரித்து அவனுக்கு அரசன் கொடுக்கச்செய்தல் வேண்டும். வீரியம் வெளிப்படா மல் இரத்தம் வெளிப்பட்டால் அவனைஅரசன் கொலைசெய்யும்படி யுத்தரவு செய்தல் வேண்டும்; இவை புலவரால் நிருமிக்கப்பட்ட வழக்கு.

(௬௭) பிணங்கும்-நெருங்கும். உணங்கும்- வாடும். நிணம்-மாமிசம். (௬௮) சூதாம் பருவம் - அரும்பாயிருக்கும் இளமைப் பருவம். போதாம்பருவம் - மல ரும் பருவம்.

புளகப் படாமுலை யுங்கழைத் தோளும் புதுமதிமே
லளகப் படாமு மெழுதின மாயினு மன்பிலர்நெஞ்
சுளகப் படாமுத்தர் நெல்லையன் ஞரொருக் காலுநம்பா
லிளகப் படாநெஞ்சை யெப்படி யோவின் கெழுதுவதே. (௬௯)

பின்னாள் நெடுந்தகை குறிவயி னீடு சென்றிரங்கல்.

(இ-ள்) எட்டா நாள் தலைவன் குறியிடமாகிய மாதவிப் பந்தரிடத்து வந்து தலைவியைக் காணாது காலம் நீட்டித்து நின்று வருந்துதல்.

பூக்கமழ் கோதையை நென்னலி லேதந்து புல்லென்றமை
நீக்குமென் றுலிதற் கேதுசெய் வேனன்பர் நெஞ்சினுள்ளே
தூக்கிய பாதத்தர் நெல்லையஞ் சாரற் சுரும்பிற்கெட்டே
னுக்கிய தெய்வ மழிக்கிலெங் கேசென் றறிவிப்பதே. (௭௦)

அன்றிலோடு புலம்பல்.

(இ-ள்) தலைவனைப் பிரிந்த தலைவி அன்றிற் பறவையொடு வருந்திக் கூறுதல்.

பெருகும் புனற் சிந்து பூந்துறை யார்நெல்லை மேற்பெருத்துக்
கருகும் பெரிய தடம்பெண்ணை மேலிரை காதலித்தே
யருகுங் கலவி யெனப்பிரி யாதல கோடலகு
சொருகுங் குருகினங் காள்சொல்லு வீர்மனஞ் சோர்பவர்க்கே. ()

அன்னத்தோடு புலம்பல்.

(இ-ள்) தலைவனைப் பிரிந்த தலைவி அன்னப் பறவையொடு வருந்திக் கூறுதல்.

பேட்டிளங் கால்வண் டுழுந்தொறு மாடக வெள்ளம்பெற்ற
கோட்டிளங் கொன்றையு மில்லைகொல் லோகுனிக் காயெருக்குந்
தோட்டிளந் தும்பையுஞ் சூடும்பி ரானெல்லை சூழுமிந்த
நாட்டிளங் காலனங் காளன்பர் போகிய நாடெங்குமே. (௭௨)

ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்.

(இ-ள்) கடு - ஆவது துறைப் பொருளிற் காண்க.

---

(௬௯) புளகம் - மயிர் சிலிர்த்தல். படாம் - உத்தரீயம். கழை - மூங்கில். அளகப்படாம் - கொடிபோல நீண்ட கூந்தல். படாம் - பெருங்கொடி. (௭௦) நென்னலிலே தந்து - நேற்றுக் கூட்டுவித்து. நீக்கும் - (இன்று) நீக்கிவிடும். (௭௧) பெண்ணை - பனை. காதலித்து - விரும்பி. அருகும் -(பிரிந்தால்) குறையும். அலகு - பறவை மூக்கு. (௭௨) ஆடக வெள்ளம் - பொன்னிற மிருதி. குனிக்காய் - வளைந்த காய்.

பைந்நீழ ஞகச் சடையாளர் நெல்லைப் பரமர்வெற்பி
லெந்நீ ழலைமறந் தேகின பாவைக்கங் கேயெயினர்
தந்நீழ றம்மி லடங்குமப் போது தவிர்ப்பவண்ணல்
வெந்நீழ லன்றியுண் டோவந்த ணீரந்த வெஞ்சுரத்தே. (எங)

பாலனைப் பழித்தல்.

(இ-ள்) உஅ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

பொறிவைக்கும் பாந்தட் சடையாளர் நெல்லைப் பொருப்பின்முந்நீர்
கறுவிக் கவரும் விழியணங் கேசெவ்விக் காமகலஞ்
செறிவிக்கு நோன்பதத் தீவினை யேனுக்குஞ் சேர்ப்பருக்கும்
பிறிவித் திடுமருந் தோவிதற் கோமகப் பெற்றதுவே. (எச)

தன்பதி யணிமை சாற்றல்.

(இ-ள்) ௬௯ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

போற்றிப் பதமிருந் தாறணங் கேபுள்ளு மாவுஞ்செலா
வேற்றுப் புனமிது கானவ ரூரினி மேனடந்தா
னேற்றுப் பிறைமுடி யார்நெல்லை யூரும்நெட் டோடைகளுந்
தாற்றுக் கதலியுந் தாமரைக் காடுந் தடாகமுமே. (எரு)

சுனைநயப் புரைத்தல்.

(இ-ள்) ௬௯ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

பௌவக் கடுவிட முண்டார்தென் னெல்லைப் பரமர்வெற்பிற்
கொவ்வைக் கனிசெய்த கோலத்தி னுலுங் குரவைவண்டின்
கௌவைக் கருங்குழல் வாசத்தி னுலுங் கருத்தினின்ற
செவ்வைச் சுனையல்ல வோவணங் காடிய தீஞ்சுனையே. (எசு)

(எங) எம் - எம்முடைய. எயினர் - வேடர். தந்நீழல் தம்மிலடங்கு மப்போது - உச்சிப் பொழுதில். அண்ணல் - தலைவன். வெந்நீழல் - விருப்பமாகிய நிழல் (எச) பொறி - புள்ளி. கறுவி-கோபித்து. நோன்பு-தவம். அதம்-தாழ்வு; இல்லாத. சேர்ப்பர் - தலைவர். (எரு) ஆறு - சிரமபரிகாரஞ் செய். மா - மிருகம். நேற்றுப்பிறை-மூன்றும் பிறைச் சந்திரன். தாறு-குலை. கதலி - வாழை.(எசு) பௌவம் - கடல். கனி - கனிபோன்ற அதரம். கோலம் - அழகு. குரவை - பெருமுழக்கம். கௌவை - கள்; தேன். சுனையென்றது கலவியைக் குறித்து நின்றது. அணங்கு - பெண்ணே.

தலைமகன் மறுத்தல்.

(இ-ள்) ௪அ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மதம்பார்த்து வேழ முரித்தோர்தென் னெல்லையின் மாரனஞ்சக்
கதம்பார்த் தொறுக்குங் கயல்விழி யீர்கன்ன் மூட்டிக்கிண்டிப்
பதம்பார்த் தெடுத்து வடித்தவெண் சோறு பசித்தவர்தம்
மிதம்பார்த் தளிக்கவில் லீரிது வோவுங்க ளில்லறமே. (எஎ)

இடையூறு கிளத்தல்.

(இ-ள்) ௬எ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மாடஞ் செயுநெல்லை வேய்முத்தர் நாட்டின் மலர்ப்பொகுட்டுப்
பீடஞ் செயுமலர்ப் பெண்ணமு தேபெரும் பாவிநெஞ்சைக்
கூடஞ் செயுங்கொங்கை யானைபல் லாற்கொற்ற வேள்சுருதி
பாடஞ் செயுங்கண்க பாடஞ்செய் தாலென் பகர்வதுவே. (எஅ)

பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல்.

(இ-ள்) மடலேறுவே னென்ற தலைவனை நோக்கிநீ படமெழுதியன்றோ? மடலேறவேண்டும். தலைவி அவயவத்தை யெழுத முடியாதேயென்று பாங்கி கூறுதல்.

மிடிபட்ட நுண்ணிடை பங்காளர் நெல்லையில் வேந்துன்மல
ரடியிட்டு வைத்தத னற்பய னென்னரசந் தின்றவைவேல்
வடியிட்ட கண்ணி வடிவே யெழுத மருங்கிற்குமோர்
படியிட்டு வைத்தில னேவெளி யாகப் படைத்தவனே. (எகூ)

உலகியல் மேம்பட விருந்து விலக்கல்.

(இ-ள்) உற்றூர் அயலூரிலிருந்து வந்தால் அவர்க்கு உணவுகொடுத்து உபசரித்தல் உலகியல்பாதலால் அவ்வுலகியல் பெருமைப்படத் தலைவனை எம்மூர்க்கு வந்திருந்து விருந்துண்டுபோவெனப் பாங்கி தலைவன் செல்லுதலை விலக்கல்.

(எஎ) மதம் - செருவம். கதம் - கோபத்தால். பின்னிரண்டடிக்கும் அநுபவித்தற்குரிய பருவமுடைய தலைவியை அநுபவிப்பவர் நன்மையைப் பார்த்துச் சேர்த்து வைக்கிறதில்லை. இதுவோ உங்கள் கொடைத் தன்மையென்று தலைவன் பாங்கியொடு கூறினு னென்பது பொருள். (எஅ) பொகுட்டு- தாமரைக் கொட்டை. கபாடம் - மறைத்தல். (எகூ) மிடி-இல்லாமை. வேந்து- தலைவனே. இட்டு - படைத்து. வெளி - ஆகாயம்.

மீனுண் டிளங்குரு கார்நெல்லை வேலியர் வெற்பிலிந்தக்
கானுண்ட வேட ரறவும்பொல் லார்கங்கு றங்கியிவ்வூர்
யானுண் டுமக்குற வாகநொந் தீரிஙளப் பாறநல்ல
தேனுண்டு மாவுண்டு நீருண்டு போகச் சிறப்புண்டுமே. (அ0)

இறைவனை நகுதல்.

(இ-ள்) தலைவன் அப்பாற் சென்றுணைகதோழி தலைவியை நோக்கிச் சிரித்துப் பேசுதல்.

முடத்தேய் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரலின் மூச்சுடலம்
படத்தேயுந் தண்டழை கொண்டெய்த வர்பகற் போதிலடித்
தடத்தேசெ லாமற் புனங்காக்கும் பேதையர் தங்கள்கொங்கைக்
குடத்தேயுந் தேடுவ ரோகெடுத் தேமென்ற குஞ்சரமே. (அக)

நற்று யிரங்கல்.

(இ-ள்) டுசு - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மூற்றித்ரி சூலத்தர் நெல்லையஞ் சாரலின் மும்மதமா
மாற்றுப் புனலுங் கவரும்வெம் பாலையி லண்டிமலர்
தூற்றிக் குழலை முடிப்பவ ரார்சுட்ட பாலைவள்ளத்
தாற்றித் தருபவ ராரணங் கேயுன் னருகிருந்தே. (அஉ)

பருவங்கண்டு பாங்கி புலம்பல்.

(இ-ள்) தலைவன் பிரியும்போது வருவேனென்று சொல்லப்பட்ட கார் காலத்தைக் கண்டு பாங்கி வருந்திக் கூறுதல்.

மெழுகா யுருகின்ற வன்பர்க்குள் ளார்நெல்லை வெற்பர்சொன்ன
வெழுகாரும் வந்து தலைப்பட்ட தாலிங் கிரவுபக
லொழுகா றெனுங்கண்க ளூற்றடை யாளெனக் கொன்றுஞ்சொலாண்
முழுகாண் மலர்முடி யாளணி யாண்முலை முத்தங்களே. (அங)

நற்று யிரங்கல்.

(இ-ள்) டுசு - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மேலுந் தனித்திப் படிவரு மோகுன்றில் வேடர்வில்லுங்
கோலுஞ் செறியுங் குறிஞ்சியெம் மூரண்டர் கோனுஞ்செங்கண்
மாலுந் தொழுமுத்தர் நெல்லையஞ் சாரல் வரையிற்றென்றற்
காலுந் தமிழ்மணக் குந்திரு நாடன் கடிநகரே. (அச)

(அ0) கானுண்ட - காட்டிவிருக்கின்ற. (அக) முடம் - வளைவு தேயும் - வாடும். (அஉ). மூற்றி........ (அங) தலைப்பட்டது - வெளிப்பட்டது. (அச) இப்படி - இந்தப் பூமியில். கால் - காற்று.

இடையூறு கிளத்தல்.

(இ-ள்) ௩௭ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மைக்கடங் காக்கண்டர் நெல்லையி லேவட குன்றமெனுந்
திக்கடங் காமுலை யைப்புதை யாய்தென்ற லந்தமிழின்
மெய்க்கடங் கான்முனி கைப்போ தடங்கும் விரிகடல்போற்
கைக்கடங் காதுன் குழைக்கடங் காத கருங்கடலே. (அரு)

தலைவி பாணனை மறுத்தல்.

(இ-ள்) பரத்தையிற் பிரிந்த தலைவன் விடுத்த தூதாக வந்த பாணனைத் தலைவி மறுத்தல்.

மொழிகைக்கு மீதன்றி யன்பர்திண் டேருக்கு முன்றில்வர
வழிகைக்கு மீதுகண் டாயிசைப் பாண மதிக்குடையோ
னழிகைக் கனல்விழித் தார்நெல்லை மால்வரை யத்தமுற
விழிகைக் குழன்மட வார்விலைச் சேரிக் கெழுந்தருளே. (அசு)

தன்னிலை தலைவன் சாற்றல்.

(இ-ள்) ஆசைநோயால் வருந்துந் தலைவன் தன்னிலைமையைப் பாங்கிக்குச் சொல்லுதல்.

மோக்கக் குழையு மனிச்சமென் பூவின் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்தென்ப ரேநுரைக் கங்கைமுடி
தேக்கப் பொறுப்பவர் நெல்லையி லேசிற் றிலிற்சிறுசோ
றுக்கப் பொறுத்திருந் தேனளி யீர்பசி யாறுதற்கே. (அஎ

இதுவுமது.

மௌவலைப் போலு நகைவலத் தார்நெல்லை வாரிதிநீர்ச்
செவ்வலைக் கேசென்று தோணி துழாவிச் சிறந்தவையர்
மெய்வலைக் கேபட்ட மீன்போலு மென்னெஞ்ச மீனுமுங்கள்
பொய்வலைக் கேபட்ட தேயிது போலவும் பொய்யிலையே. (அஅ)

(அரு) புதையாய் - மூடமாட்டாய். கருங்கடல் - கரிய கடல்போன்ற கண். (அசு) மொழி - (உன்)சொல். அழிகைக்கு - சாதற்கு. அத்தமுற - திரவியஞ் சேரும் பொருட்டு. இழிகைக்கு - இழிதொழிலுக்கு. உழல் - சஞ்சரிக்கின்ற. (அஎ) தேக்க - நிறைய. நான்காவதடிக்கு, இதுவரை பொறுத்திருந்தேன். இப் பொழுதே விரகநோய் தீர்ப்பதற்குத் தலைவியைச் சேர்த்துவைப்பாயெனத் தலைவன் பாங்கியிடத்துக் கூறினனென்பது பொருள். (அஅ) மௌவல் - முல்லையரும்பு. வலத்தார் - வெற்றியையுடையவர். செவ்வலைக்கு - செவ்வையாகிய வலை வீசுதற்கு. துழாவி-கலந்து. நெஞ்சமீன்-மனமாகிய மீன்.

மன்மதனோடு மதிகண் டிரங்கல்.

(இ-ள்) தலைவி மன்மதனையுஞ் சந்திரனையுங் கண்டு வருந்திக் கூறுதல்.

யானைப் பகடுரித் தார்நெல்லை நாத ரிருஞ்சிலம்பின்
மானைக் கவரும் வரிவிழி யீர்மத வேளுமின்னர்
சேனைக் குழாத்துடன் றானும்வந் தான்செய்ய வானிலண்டர்
கோனைக் கொழுந னெனப்படைத் தாளுங் குலாவினளே. (அகூ)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

(இ-ள்) பாங்கிதலைவியை நோக்கிக் கார்காலம் வருமுன் நீ யிவ்வாறு வருந்துவ தென்னை யென்று கொடிய சொல்லைச் சொல்லுதல்.

யூகங் குதிக்கும் பொழினெல்லை நாத ருயர்சிலம்பிற்
சோகந் தவிர விழிபனி மாரித் துளிசொரிந்தான்
மாகஞ் செறிகதிர் வட்டச்செந் தீயை மறைக்கவின்றே
மேகந் தலைப்படு மோவன்பர் வாய்மை வெளிப்படவே. (கூ0)

அவனஃதிவ்விடத் திவ்வியற் றென்றல்.

(இ-ள்) தலைவன் என்னாற் காணப்பட்ட உரு இந்த இடத்து இந்த இயலையுடையதென்று பாங்கனுக்குச் சொல்லுதல். பாங்கன் - தோழன்.

யோகஞ் செறியர னெல்லையஞ் சார லுருகுமின்ப
போகஞ் செறியும் புணர்முலை யாளுக்குப் பூங்கமலத்
தாகந் திருமனை செங்கைபைங் காந்த ளமிர்தமொழி
நாகஞ் செறிபட மல்குல்கண் டாயினி நன்னண்பனே. (கூக)

புகழ்தல்.

(இ-ள்) உடு - ஆவது துறைப் பொருளிற் காண்க.

வழுதிகண் டாலிக்க வேயில்வந் தார்நெல்லை மால்வரைத்தே
னுழுதுகண் டாலிக்கு மென்குழ லீருமைக் கோட்டிச்சற்றே
பழுதுகண் டான்முன் னிடைபடை யாமற் படைத்தவனே
யெழுதிலுண் டாகு மிடையில்லை யாகி லிடையில்லையே. (கூஉ)

தலைவி நெஞ்சொடு புலத்தல்.

(இ-ள்) தலைவனைப் பிரியுந் தன் தலைவி மனத்தொடு வருந்திக்கூறுதல்.

(அகூ) யானைப்பகடு-ஆண் யானை. அண்டர் கோன் -இந்திரன். கொழுநன் - நாயகன். படைத்தாள் - கொண்டவளாகிய சசி. சசி-இந்திராணி + சந்திரன். (கூ0)யூகம் - கருங்குரங்கு. மாகம் - ஆகாயத்தில். செறி - நெருங்கிய. (கூக) புணர் -நெருங்கிய. கமலத்தாகம் - தாமரைமலர் வடிவம். நண்பன் - தோழன். (கூஉ) ஆலிக்க - மனமகிழ. தேன் - வண்டு, கோட்டி - எழுதி. பழுதுகண்டான் - குற்றஞ் செய்தான்.

வார்துணை யாமுலைக் குற்ற துணையது வாழ்பசலை
நீர்துணை யாயது கண்கட் கொளிர்நெடுஞ் சூலமன்றிப்
போர்துணை யாமழு வார்நெல்லை நாதர் பொருப்பிலினி
யார்துணை யாவர்நெஞ் சேயன்பர் போகிலென் னாருயிர்க்கே. (கஈ)

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்) கஎ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

விடஞ்சூல் கொளுங்கண்டர் நெல்லைபி லேகடன் மேய்ந்துவயி
றிடஞ்சூல் கொளுங்கொண்டன் முற்பட்ட தான்முத்த மீன்றுலையத்
தடஞ்சூல் கொளுஞ்சங்க மேவங்க மேமுடத் தாழைச்செங்காய்க்
குடஞ்சூல் கொளும்பொழி லேயன்பர் மீளுங்குறிபொய்த்ததே.(கச)

தன்மனத் தழுங்கல்.

(இ-ள்) தலைவியுடல் தணியாளாக தலைவன் றன் மனத்தொடு வருந்திக் கூறுதல்.

வீழ்ந்தா தரத்துடன் மாறுெழு வோர்நெல்லை வேலைவலை
சூழ்ந்தாலு மீனுக்குத் தோணிவிட் டாலுமெய் சூட்டமுத்தங்
காழ்ந்தாலு நின்று பலநா ளுணங்கி யடிக்கடிமண்
டாழ்ந்தாலு மில்லைகொ லோமட வாருக்குத் தண்ணளியே. (கரு)

தனித்துழி யிறைவி துனித் தழுதிரங்கல்.

(இ-ள்) தலைவி தலைவனைப் பிரிந்து தனித்த இடத்துத் துன்பமுற்று அழுது வருந்துதல்.

வென்றாலுஞ் சூலத்தர் நெல்லையஞ் சாரலில் வீசுதென்றற்
கன்றாலுங் கூவுங் கருங்குயி லாலுங் கனல்கொளுத்தி
நின்றாலும் வெள்ளை நெடுநில வாலு நினைக்கினமக்
கொன்றாலு நன்றல்ல வேயன்பர் வாய்மையு மொன்றலவே. (கசு)

பாலனைப் பழித்தல்போலப் பயோதரங்களைப் பழித்தல்.

(இ-ள்) தலைவி தன் மைந்தனை நிந்தித்தல்போலத் தன் கொங்கைகளை நிந்தித்துக் கூறுதல்.

(கஈ) மழுவார் - மழுவா யுதத்தையுடையவர். (கச)விடம்சூல்கொளும்- நஞ்சுமிகுந்திருக்கும். தடம்-பெருமையாகிய. வங்கமே-கப்பலே. சூல்கொளும்- பருக்கும். (கரு) தொழுவோர்-தொழப்படுவோர். வலைசூழ்ந்தாலும்-வலைவீசினாலும்.முத்து - முத்துக்காக. ஆழ்ந்தாலும் - நீருட் குளித்தாலும். உணங்கி -வாடி. (கசு) ஆலும் - அசையும். தென்றற்கன்று - இளந்தென்றல்.

வேனலந் தோயுங் கரத்தால் வருட விடிந்துமந்தக்
கானலந் தோயுமக் காலமன் றேசிலை கால்குனித்த
கூனலந் திங்கட் சடையாளர் நெல்லைக் கொழுநருக்குப்
பானலந் தோய்முலை காளுங்க ளோடென்ன பற்றுறவே. (கூஎ)

வேழம் வினவிய தலைவனைப் பாங்கி நகுதல்.

(இ-ள்) என்னா லெய்யப்பட்ட யானை வந்ததோவென்று கேட்ட தலைவனைப் பாங்கி நகையாடித் தலைவியுடன் சொல்லுதல். நகையாடல் - சிரித்தல்.

வைவே னெடுங்கண்ணி பங்காளர் நெல்லையில் வாவியிற்பூக்
கொய்வேலை செய்யுங் கொடியிடை யாய்குஞ் சரங்குழைகொண்
டெய்வேலை யாள ரிவர்க்கிமைப் போதினி லெய்யவில்லுங்
கைவேலும் வாளும்பெற் றாலென்செ யாரக் களிற்றினையே. (கூஅ)

வாழ்த்து.

(இ-ள்) வெளிப்படை.

வௌவிய செவ்வி வடிவுடை யாடன் மகிழ்ச்சியன்பும்
வௌவிய சங்கமு மங்கல நாணு மணிக்குழையும்
வௌவிய கோலத்தர் வேயீன்ற முத்தர் மணிவரையின்
வௌவிய காதலர் நெல்லையும் வாழி வளஞ்சிறந்தே. (கூகூ)

பாட்டுத் தொகை.

(இ-ள்) இந்நூலாசிரியர் பாடிய பாடலின் எண்.

கண்ணூறு பத்மத் தரியயன் போற்றுங் கழைமுத்தர்க்குப்
பண்ணூறுஞ் சொல்வருக் கக்கோவை தன்னைப் பரிவுடனே
வெண்ணூ லணியம்பி காபதி வீரையில் வேதியன்சொல்
தொண்ணூறு மெட்டும் படிப்பார்க்கெந் நாளுஞ் சுகமுண்டுமே. ()

இக்கவியில் கோவையின் பாடற்றொகை தொண்ணூற்றெட்டெனக் கூறியிருத்தலால் தகர வருக்கத்திற் கூறிய (தொடை கிடைக்கும்) தொல்லைப்புரம் என்னும் செய்யுட்களி லொன்று பிறர் பாடலெனத் தோன்றுகின்றது.

நெல்லை வருக்கக் கோவை முற்றிற்று.

வேயீன்ற முத்தர் துணை.

(கூஎ) வருட - தடவ. கானலந்தோயும் - காலினலத்தை (அக்கைகள்) பிடித்துக் கொண்டிருக்கும். குனித்த கூனல் - வளைந்தவளைவு. பானலம் - பாலினழகு. (கூஅ) வை - கூர்மை. குழை - மாந்தளிர். அக்களிற்றினை - அந்த யானையை. (கூகூ) வௌவிய - பற்றிய. (க00) கண் - கண்ணாகிய. நூறுபத்மம் - நூறிதழ்த் தாமரை.

அருமையான தமிழ்ப் புத்தகங்கள்.

		ரூ. அ. பை.
தனிச்செய்யுட் சிந்தாமணி 182 வித்துவான்கள் பாடிய 3815 பாடல்கள் தலிக்கோ பயிண்டு		3—0—0
கம்பராமாயணம் ஆரண்ய காண்டம் மூலமும் உரையும்		3—8—0
பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலர்வர்கள் பிரபந்தத்திரட்டு	...	2—8—0
திருக்குற்றாலத்தலபுராணம் செய்யுள் (அரும்பதவுரையுடன்)	...	1—8—0
திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு (அரும்பதவுரையுடன்)	...	1—8—0
சிவஞானபாஷ்யம்	...	1—4—0
திருக்குறள் பரிமேலழகருரையுடன் (பாக்கட் சைஸ்)	...	1—0—0
கணனவிளக்கம் (ஜோதிஷம்) மூலமும் உரையும்	...	1—0—0
திருக்குறள் வசனம்	...	1—4—0
விஜயசுந்தரம் தமிழ் நாவல் (இரண்டு பாகமும் 20 படங்களுடன்)		1—8—0
ஞானம்பிகை (இரண்டு பாகம் ஒரே பயிண்டு)	...	1—4—0
ஞானசம்பந்தன் ஷை	...	1—0—0
மதனகாந்தி (படிப்பதற்கு இன்பமான புதிய தமிழ்நாவல்)	...	1—0—0
கோமதி கோகிலமானா (ஓர் அற்புதத் தமிழ்நாவல்)	...	0-10—0
மாண்டவன் மீண்டமாயம் (ஓர் திப்பறியும் தமிழ் நாவல்)	...	0—8—0
கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து (புதிய தமிழ்நாவல்)		0-10—0
தியாகராஜன் (இனிய தமிழ் நாவல்)	...	0—8—0
பொற்கொடி (குருமலை சுந்தரம்பிள்ளை இயற்றிய இனியதமிழ்நாவல்)		0—13—0
திருக்குற்றாலத் தலபுராணம் (வசனம்)	...	0—12—0
குலோத்துங்க சோழன்கோவை	...	0—12—0
ஸ்ரீவான்மீகி இராமாயணசருக்கார்த்த சங்கிரகம் (புளியங்குடி சா. தி. ரெங்கநாதன் செட்டியார் அவர்கள் இயற்றியது செய்யுள்)		0—8—0
சைவசித்தாந்த விளக்கம்	...	0—12—0
தசகாரிய விளக்கம்	...	0—8—0
குமண சரித்திரம் (இரண்டாம் பதிப்பு விசேடக்குறிப்புகளுடன்)		0—8—0
சித்தாந்த ஞானாத்திரவளி	...	0—6—0
இன்னிசை இருநூறு (சோழவந்தான் அ. சண்முகம் பிள்ளை அவர்கள் இயற்றியது)	...	0—3—0
சேக்கிழார் பிள்ளைத்தமிழ் (மஹா வித்துவான் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது		0—2—0
குற்றாலக் குறவஞ்சி	...	0—6—0
அபிதான சிந்தாமணி (தமிழ்ச்சங்கப்பதிப்பு)	...	7—0—0
தமிழ்ச் சொல்லகராதி உயிரெழுத்து முடியவுதாரணங்களுடன் ஷை	...	6—0—0
இரண்டாம் பாகம் ஷை	...	4—8—0
பாரதம் ஷை	...	3—0—0
வைத்திய சாரசங்கிரகம் ஷை	...	3—0—0
பன்னூற்றிரட்டு ஷை	...	2—0—0
சைவமஞ்சரி ஷை	...	1—8—0
ஞானாமிர்தம் ஷை	...	1—0—0

[இவைகளுக்கு V. P. தபாற்கூலி வேறு.]

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,
வித்தியாபாநு ஆபீஸ், விவேகபாநுப் பிரஸ்,
2133ஜடாமுனி கோவில்தெரு, மதுரை.